Registered as a NewsPaper

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 29 | 13-03-2003 | வியாழக்கிழமை | ஓசை 23

மங்கையர் மனங்கவரும்
நவீன நகை உலகில்
தங்க நகைகளுக்கு தனித்துவம்
பெற்ற நிறுவனம்
கணேசரா நகையகம்
T.P. 024-22464 (சி-7653)
கொழும்பு, வவுனியா, யாழ்ப்பாணம்.

# படையினரின் தான்தோன்றித்தனமான செயலினால்

# கண்காணிப்புக்குழு செயலிழந்து விட்டது!

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு விளக்கம்

**கப்பல் மூழ்கடிப்பு விடயத்தில் சிறிலங்காப் படையினர் தான் தோன்றித்தனமாக நடந்து கொண்டதினால் கண்காணிப்புக் குழுவையும், கண்காணிப்புச் செயற்பாட்டையும் செயலிழக்கச் செய்துவிட்டனர். இவ்வாறு படையினர் நடக்க முற்பட்டார்களென்றால் கண்காணிப்புக்குழு, புரிந்துணர்வு உடன்பாடு என்பதில் அர்த்த மில்லை என தம்மை நேற்றுச் சந்தித்த யுத்தநிறுத்தக் கண் காணிப்புக்குழுவின் தலைவரிடம் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

இதனை நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள் நேற்றைய ஊடகவியலாளர் சந்திப்பின் போது வழங்கிய பேட்டி வருமாறு.

**கேள்வி:-** போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் தலைமை யிலான ஐவர் கொண்ட குழு வினர் புலிகளின் வர்த்தகக் கப்பல் மூழ்கடிக்கப்பட்டது குறித்து இங்கு வந்து தங்களுடன் முக்கிய சந்திப்பை நடத்தியுள்ளனர். இதில் என்ன விடயங்கள் ஆரா யப்பட்டுள்ளன?


**பதில்:-** போர்நிறுத்தக் கண் காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் அவர்களின் சட்ட ஆலோசகர் மற்றும் உதவி யாளர்கள் ஐவர் வந்து என்னை யும் அரசியல்துறைப் பொறுப்பா ளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர் களையும் சந்தித்து சுமார் இரண்டு மணிநேரம் பேச்சுக்களை நடத்தி னார்கள்.

ஏற்கனவே சிறிலங்கா அரசு இந்த சர்வதேசக் கடற்பரப்பில் நடைபெற்ற துக்ககரமான சம்பவம் சம்பந்தமாகத் தங்களது நிலைப் பாட்டை எடுத்துச் சொல்லி யுள்ளார்கள்.

போர்நிறுத்தக் கண்காணிப் புக் குழு இதுவரை இந்தச் சம்பவம் சம்பந்தமாக தங்களது முடிவான இறுதியான அறிக் கையை வெளியிடவில்லை.

அவர்கள் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்புச் செயலர் மற்றும் கடற்படைத் தளபதி போன்ற அரச தரப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்களது கருத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இன்று எமது விளக்கத்தைப் பெற்றுக் கொண் டார்கள். எமது விளக்கத்தை அடிப்படையாக வைத்து சிறி லங்கா அரசாங்கம் சொல்லிய கருத்துக்களையும் அடிப்படையாக வைத்து விசாரணை நடத்தி இறுதி யாக தீர்க்கமான அறிக்கையை

(08ம் பக்கம் பார்க்க...)



நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்த போர் நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சனை புலிகளின் அரசியல் ஆலோசகர் கைலாகு கொடுத்து வரவேற்கிறார்.



கிளிநொச்சிக்கு நேற்று விஜயம் செய்த ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழு பிரதிநிதிகள் புலிகளின் அரசியல் ஆலோசகர் தலைமையிலான குழுவினருடன் பேச்சு நடத்துகின்றனர்.

## போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் புலிகளுடன் கிளி.யில் நேற்றுச் சந்திப்பு

(அலுவலக செய்தியாளர்)

போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுத் தலைவர் ரெலிவ்சன் உட்பட ஐவர் கொண்ட குழுவினர் நேற்று பி.ப. 3.30 மணிக்கு அரசியல்துறை நடுவப்பணியகத் திற்கு வருகை மேற்கொண்டு அரசியல் ஆலோசகரும் தத்துவா சிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களைச் சந்தித்து கலந்துரை யாடினர்.

சர்வதேச கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையினரால் விடுதலைப்புலிகளின் சரக்குக் கப் பல் மூழ்கடிக்கப்பட்டு பதினொரு போராளிகள் கொல்லப்பட்டது தொடர்பாக மேற்படி கலந்துரை யாடல் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் விடு தலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகரும், தத்துவ ஆசிரியரு மான அன்ரன் பாலசிங்கம் அவர் களும், தமிழீழ அரசியல் துறைப்

(08ம் பக்கம் பார்க்க...)

## ஐ.நா. மனித உ. ஆணைக்குழுத் தலைவர் புலிகளுடன் சந்தித்துப் பேச்சு

### - நீதி நிர்வாகம் குறித்தும் ஆராய்வு

(அலுவலக செய்தியாளர்)

அரசியல்துறை ஆலோசகரும் தத்துவ ஆசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களை ஐ.நா.மனித உ.ஆணைக்குழுத் தலைவர் இயன் மாட்டீன் கிளிநொச்சி அரசியல்துறை நடுவப்பணியகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

மேற்படி சந்திப்பு நேற்று பகல் 10.00 மணிக்கு நடைபெற்றது. விடுதலைப்புலிகள் தரப்பில் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம், நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐ.நா.மனித உரிமை

(08ம் பக்கம் பார்க்க...)

## அமெரிக்காவிடமிருந்து சிறீ.இற்கு நவீன போர்க்கப்பல்

கரையோரப்பாதுகாப்பு நடவ டிக்கைகளுக்காக இலங்கைக்கு நவீன போர்க்கப்பல் ஒன்றை வழங்க அமெரிக்கா தீர்மானித் துள்ளது.

ஹெலிகொப்டர் ஒன்றை தரையிறக்கக்கூடிய வசதிகளைக் கொண்ட இந்தக்கப்பலை கொள் வனவு செய்வதற்காக பல நாடுகள் கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்திருந்தன. 15 கோடி டொலர்கள் பெறுமதி வாய்ந்த கப்பலை விற்பனை செய்ய அமெரிக்க காங்கிரஸ் சபை அங்கீ காரம் வழங்கியுள்ளது. இவ்யுத் தக்கப்பலை நிவாரண அடிப் படையில் கொள்வனவு செய்ய விருப்பதாக பாதுகாப்பு அமைச் சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## தமிழீழ வைப்பக பளைக்கிளை திறப்பு

தமிழீழ வைப்பகத்தின் பளைக்கிளை நாளை வெள்ளிக் கிழமை காலை 10.00 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளது.

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சுப்பிரமணியம் விநாயகமூர்த்தி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், வைத்தியக் கோவை அறிமுக அட்டையும் 08.03.2003 அன்று கிளிநொச்சிக்கும் - புளியம் பொக்கணை சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

(3010)


## பொங்குதமிழ் ஓராண்டு நிறைவுநாள்

(வவுனியா)

வவுனியாவில் கடந்தவருடம் மார்ச் 01ஆம் திகதி நடைபெற்ற பொங்கு தமிழின் ஓராண்டு நிறைவு நினைவுநாள் நிகழ்ச்சிகள் எதிர்வரும் 29ஆம் திகதி நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொங்குதமிழ் ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிகழ்வு வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.


## பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் மாகாணக்கல்வி பணிமனையின் ஆதரவுடன் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர், யாழ். முன்னணி ஆசிரியர்கள் நடாத்தும் பரீட்சை வழிகாட்டல் கருத்தமர்வு.

**14-03-2003 வெள்ளி - மு/புதுக்குடியிருப்பு ம.வி.**
**15-03-2003 சனி - கிளி/கனகபுரம் ம.வி.**

நேர அட்டவணை வருமாறு (இரு இடங்களுக்கும் பொதுவானது)

**9.00 - 11.00 மணி - கணிதம் - கலாநிதி சற்குணராசா**
**9.00 - 2.00 மணி - அளவையியல் - கலாநிதி நவரட்ணம்**
**11.00 - 1.00 மணி - பௌதீகவியல் - பேராசிரியர் கந்தசாமி**

2003 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(3015) **தமிழீழ மாணவர் அமைப்பு.**

## அறிவித்தல்

அமைய அடிப்படையில் ஆட்கள் தேவை
தங்குமிட வசதி கவர்ச்சியான
கொடுப்பனவுடன் மதிய உணவு இலவசம்
உடனடியாக நேரில் சமுகம் தரவும்
**உப்பு உற்பத்தி நிறுவனம்**
(3014) **பரந்தன்.**

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

**மலர்வு** 29 - 02 - 1929

**உதிர்வு** 14 - 02 - 2003



## அமரர் திருமதி முருகேசு அரசம்மா

445/8, தருமபுரம்

எமது குலவிளக்காய் இருந்து எம்மை ஆளாக்கிய அருமை அம்மாவின் மறைவுச் செய்தி கேட்டு ஓடிவந்து உதவியவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பிய உறவினர்கள், நண்பர்களுக்கும், கண்ணீர் அஞ்சலியை அச்சிட்டு வழங்கிய அன்பர்களுக்கும், எமது தாயாரின் மறைவுத் துயரிலும், அன்னாரின் இறுதிக் கிரியையிலும் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 15.03.2003 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக் கிருத்தியத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-குடும்பத்தவர்கள்-

மு. சிவஞான சுந்தரமூர்த்தி (கி. அலுவலர்)
மு. நடனவதி (ஆசிரியை)
மு. நித்தியானந்த மூர்த்தி
(க. வ. ப. நோ. கூ. சங்கம்)
மு. திருஞான மூர்த்தி
(விசுவமடு. ப. நா. சி. கூ. ச)

இல:- 445/8 தருமபுரம்,
பரந்தன். (சி-8014)



உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாண சபை

## வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.

"ஆஅவ" கடன் இல.1846 - SRI(SF)

# கேள்வி அறிவித்தல்

## கட்டட நிர்மாண வேலைகளைப் பெறுதல்

1. வடக்கு, கிழக்கு சனசமூக புனருத்தாரண, அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆஅவ) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக மன்னார் மாவட்டக் கேள்விச் சபையின் தலைவர் பின்வரும் ஒப்பந்த வேலைக்கு தகுதிவாய்ந்த கூறுவிலையிடுவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கூறுவிலைகளைத் தற்போது கோருகின்றார்.

ml;ltiz

| இல | ஒப்பந்த இல. | ஒப்பந்தத்தின் பெயர் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | ஆகக் குறைந்த ICTAD பதிவு | கூறுவிலை பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | MN/NECORD/ WS/01 | முருங்கனில் உள்ள மன்னாருக்கான தண்ணீர்த்தாங்கியை மீளப்புனரமைத்தலும் நீரிறை க்ருவி இயக்குநரின் வதிவிட திருத்தவேலையும் | 1500/= | M6 நீர்வழங்கல் வடிகாலமைப்பு | 67,000 |
| 02 | MN/NECORD/ WS/02 | வங்காலை குடிநீர் வழங்கல்த்திட்டத்தின் தண்ணீர்த்தாங்கியை மீளப்புனரமைத்தல். | 1500/= | M7 நீர்வழங்கல் வடிகாலமைப்பு | 45,000 |
| 03 | MN/NECORD/ ED/13 | அடம்பன் மகாவித்தியாலயத்தில் 110'x25' இரண்டு மாடிக்கட்டடமும் 60'x20' வகுப்பறைக்கட்டடமும் நிர்மானித்தலும்.வகுப்பறைத் திருத்தமும். | 1000/= | M7 கட்டட நிர்மாணம் | 49,000 |
| 04 | MN/NECORD/ ED/14 | கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலையில் 110'x25' இரண்டு மாடி வகுப்பறை கட்டட நிர்மாணம் மற்றும் வகுப்பறைக் கட்டடம் புதுப்பித்தல். | 1000/= | M7 கட்டட நிர்மாணம் | 42,000 |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ள சகல ஒப்பந்த காரர்களும் கூறுவிலை கோரலாம்.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட துறைசார் தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச.) உறுப்பினராக ("ICTAD"ல் மேற்படி M7க்கு மேலான பதிவு பெற்றவர்களுக்கு மட்டும்) இருக்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலையில் செய்யப்பட்ட திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுபத்திரங்களின் மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்றை வழங்குமாறு கூறுவிலையிடுவோர் வேண்டப்படுகின்றனர்.

IV. இக்டாட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கூறுவிலை ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகள் அல்லது திருப்திகரமற்ற வேலைகள் என்னும் காரணங்களுக்காக தகுதியற்றவர் என பிரகடனப்படுத்தப்பட்டவர்.

VI. கூறுவிலை ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் நாளது தேதிவரை புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.

4. இதன் தொடர்பாக பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கூறுவிலையிட முடியும். ஒவ்வொரு ஒப்பந்த விடயமும் புறம்பானதொரு கேள்வியாக அமைய வேண்டும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டத்தின் (NECORD) கீழ் தற்பொழுது செயற்படுத்திக் கொண்டிருக்கும் ஒப்பந்த வேலைகள் உட்பட மூன்றாக இருக்கும்.

5. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவல்களை வடக்கு கிழக்கு சமூக புனருத்தாரண அபிவிருத்தித் திட்டம் (NECORD), மன்னார் அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் கேள்வி சம்பந்தமான ஆவணங்களையும் பரிசீலனை செய்யலாம். தொலைபேசி 023-3103, தொலைநகல் 023-33103, ஈமெயில் distmnr@sltnet.lk.

6. கேள்வி ஆவணங்களை 12-03-2003இலிருந்து 27-03-2003 வரை காலை 9.30இலிருந்து பிற்பகல் 3.00 மணிவரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து உரிய மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

7. முன்கூட்டிய கேள்விக் கூட்டமொன்று 27-03-2003 மாலை 2.00 மணிக்கு கச்சேரியில் நடைபெறும்.

8. கேள்வி கோருவோரின் முன்தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், இரு பொறி வைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட விலையிடப்பட்ட கேள்விவிலையையும் கேள்விவிலை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், பந்தி 9இல் குறிப்பிட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

9. பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச் சபை, NECORD, மாவட்ட திட்ட அலுவலகம், கச்சேரி, மன்னார் என்ற விலாசத்திற்கு 03-04-2003 மாலை 2.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

10. கூறுவிலைகளின் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கூறுவிலையிடுவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருனர் பொறுப்பாக விளங்கமாட்டார்.

**வே. விசுவலிங்கம், தலைவர்,**
**மாவட்ட கேள்விச்சபை / அரசாங்க அதிபர்,**
**NECORD திட்டம், மன்னார்.**

(சி-7808)

# பிரிட்டனின் உதவியின்றிப் போரை ஆரம்பிக்க அமெரிக்கா ஆலோசனை!

## பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் தகவல்

**பிரிட்டனின் துணையின்றியே ஈராக் மீது போரை ஆரம்பிப்பது குறித்து அமெரிக்கா தற்போது ஆலோசித்து வருகிறது. பிரிட்டனில் ரொனி பிளேயரின் அரசிற்கு ஏற்பட்டு வருகின்ற நெருக்கடிகளைத் தொடர்ந்து பிரிட்டன் போரிலிருந்து விலகி விடுமோ என்ற சூழ்நிலை எழுந் துள்ளது. இதனைத் தொடர்ந்து, அமெரிக்கா, பிரிட்டன் அரசுடன் பேச் சுக்களை நடத்தி வருவதுடன் தனியாக போரை ஆரம்பிப்பது குறித் தும் தீவிரமாக ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.**

அமெரிக்கா, பிரிட்டனின் உதவி யின்றியே ஈராக் மீது போர் தொடுக் கக் கூடும் என்று அமெரிக்க பாது காப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ் பீல்ட் தெரிவித்துள்ளார். பென்ட கனில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இத்தக வலை வெளியிட்டார்.

இதற்கான இறுதி முடிவை சனாதிபதி ஜோர்ச் டபிள்யூ புஷ் எடுப்பார். அவர் இது குறித்து விரைவில் அறிவிப்பார் எனவும் அவர் தெரிவித்தார்.

நெருங்கிய சகாவான பிரிட் டனின் உதவி இல்லாமலேயே அமெரிக்கா ஈராக் மீது யுத்தத்தை ஆரம்பிக்குமா என்று செய்தியா ளர்கள் இவரிடம் கேள்வி எழுப் பினர். இக் கேள்விக்குப் பதிலளிக் கும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

அமெரிக்காவும் பிரிட்டனும் வளைகுடாவில் ஈராக்கைச் சுற்றி 2 இலட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான துருப்புக்களை இப் போது குவித்து வைத்திருக் கின்றன.

ஆனால் ஈராக்கிற்கு எதிராகத் தொடுக்கப்படும் யுத்தத்தில் பிரிட் டன் அமெரிக்காவுடன் இணைந்து கொள்வது குறித்து பிரிட்டிஷ் பிரதம மந்திரி ரொனி பிளேயர் உள் நாட்டிலேயே பல எதிர்ப்புக ளுக்கு உள்ளாகி இருக்கிறார்.

அமெரிக்கா வளை குடாவில் குவித்து வைத்திருக்கும் அதன் 2 இலட்சத்து 25 ஆயிரம் துருப்புக் களுடனும் வழியில் செ று கொண்டிருக்கும் மேலும் ஆயிரக் கணக்கான துருப்புக்களுடனும் பிரிட்டனின் உதவியின்றியே ஈராக் மீது தாக்குதலைத் தொடுக்குமா? அல்லது பிரிட்டன் தானாகவே யுத்தத்தில் இருந்து விலகிக் கொள்ளுமா என்ற கேள்விகளைச் செய் தியாளர் கள் அமெரிக் க அமைச்சரிடம் கேட்டனர்.

இந்த விடயங்கள் குறித்து சிரேஷ்ட அமெரிக்க அதிகாரிகள் நாளாந்தம் பிரிட்டனுடன் பேசி வருகிறார்கள் என்று அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரி வித்தார்.

# 21,000 இறா. எடையுடைய விமானக் குண்டு பரீட்சிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க விமானப்படை 21 ஆயிரம் இறாத்தல் எடை உள்ள பாரிய குண்டொன்றை வடமேற்கு புளோரிடாவில் பரீட்சார்த்த நடவடிக் கையாக வெடிக்க வைத்துள்ளது.

எல்லாக் குண்டுகளுக்கும் 'தாய் குண்டு' என பெயரிடப்பட்டுள்ள இக் குண்டு மிகவும் சக்தி வாய்ந்தது என்றும் தற்போது அமெரிக்காவில் உள்ள 15 ஆயிரம் இறாத்தல் எடை உள்ள அதி சக்தி வாய்ந்த குண்டிலும் பார்க்க நாற்பது சதவீதம் கூடுதல் சக்தி வாய்ந்தது என்றும் அமெரிக்க உக்ரின் விமானப்படைத்தள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்திய அரசின் மௌனத்திற்கு எதிர்கட்சிகள் பலத்த கண்டனம்

## கூடி ஆராயவும் ஏற்பாடு

(புதுடில்லி)

ஈராக் மீதான அமெரிக்காவின் உத்தேச யுத்தம் தொடர்பாக இந் திய அரசாங்கம் மௌனம் சாதித்து வருவதையிட்டு இந்திய எதிர்க் கட்சிகள் கண்டனம் தெரிவித் துள்ளன.

ரஷ்யாவின் ஆதரவு காரணமாக இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே முன்னர் பனிப்போர் நில விய போதும் கடந்த சில வருடங் களாக இரு நாடுகளும் நெருங்கி வந்துள்ளன.

அதேவேளை, இந்தியா ஈராக் கின் நீண்டகால நட்பு நாடுமாகும். இந்நிலையில் யுத்தம் ஏற்பட்டால் இந்தியாவின் சில வசதி வாய்ப் புக்களை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்வதற்கு ஆளும் கட்சி மறுப்பு தெரிவிக்க வேண்டும் என்று வற்புறுத்தும் நோக்கில் கூடிப் பேசுவது என எதிர்க்கட்சிகள் இணங்கி உள்ளன.

1990 ஆம் ஆண்டு வளைகுடா யுத்தத்தின் போது இந்தியா தனது வசதி வாய்ப்புக்களை பயன்படுத் திக்கொள்ள அமெரிக்காவுக்கு அனுமதி வழங்கி இருந்தது.

எனினும் இம்முறை ஈராக் விடயத்தில் நடுநிலை வகிப்பதாக இந்தியா கூறி வருகிறது. ஆயினும் தீர்க்கமாக எதனையும் அது குறிப் பிடவில்லை.

## தாயின் பெயரை இணைக்க முடிவு

(புதுடில்லி)

இந்தியாவின் குஜராத் மாநி லத்தில் இனி எந்தப் பாடசா லைக ளில் குழந்தைகளைச் சேர்த் தாலும், குழந்தையின் தாயின் பெயரைத் தெரிவிப்பது கட்டா யமாகிறது.

சர்வதேச மகளிர் தினத்தை யொட்டி அஹமதாபாத் நகரில் சனிக்கிழமை நடத்திய கிராம மகளிர் பொதுக்கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் நரேந்திர மோடி இந்த அறிவிப்பை வெளியிட் டுள்ளார்.

விண்ணப்பங்களில் இனி அம்மாவின் பெயரை எழுதுவது கட்டாயம். அப்பாவின் பெயரும் இருக்கலாம். அது கட்டாயம் இல் லை. அம்மாவின் பெயர் கட்டாயம் என்ற ஆணை பிறப்பித்துள்ள முதல் மாநிலம் குஜராத் என்பது குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தானில் இடம் பெற்ற ஈராக் யுத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டமொன்றில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களை படத்தில் காண்க.



ஆப்கானின் மியன்வாலி என்ற இடத்திலுள்ள அகதிமுகாமில் தனது சகோதரனை முதுகில் காவிச் செல்லும் அகதிப் பெண்.

# ஈராக்கிலுள்ள இந்தியர்களை உடன் வெளியேறப் பணிப்பு

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்கும் அபாயத்தைக் கருத்தில் கொண்டு ஈராக்கில் உள்ள இந்தியர்கள் உடனடியாக வெளியேற வேண் டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

புதுடில்லியில் ஈராக் பிரச்சினை தொடர்பாக பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஈராக்கின் நிலைமை விரைவாக மாறிவருவதாகவும், போர் மூண்டால் எந்தவொரு நிலைமையையும் சமாளிக்க இந்தியா தயாராகவுள்ளதாகவும் அவர் கூறினார். வளைகுடாப் பகுதியில் உள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய அனைத்து முன்னெச்சரிக்கைகளும் செய்யப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

# தற்கொலைத் தாக்குதல்களால் இஸ்ரேல் பெரும் கவலை!

பலஸ்தீன தீவிரவாதிகள் தொடர் ந்தும் தற்கொலைத் தாக்குதல்க ளில் ஈடுபட்டு வருவதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியுள்ளது.

அண்மையில் இஸ்ரேலிய உலங்குவானூர்தி மேற்கொண்ட ரொக்கட் தாக்குதலில் இஸ்லாமிய தீவிரவாதக் குழுவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரும் பலியாகி இருந்தார். தற்கொலைத் தாக்கு தலை மேற் கொள்ளத் திட்டமிடும் எந்தவொரு குழுவினரதும் உறுப்பி னர்களை இனங்கண்டு தாக்கு வதில் இஸ்ரேல் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறது.

பயங்கரவாதத்தில் ஈடுபடுபவர் எவர் மீதும் தமது தாக்குதல் தொடர்ந்தும் இடம்பெறும் என்று இஸ்ரேலியப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# உள்நாட்டு மோதல்களுக்கு எதியோப்பியா தொடர்ந்தும் தூபமிட்டு வருகிறது

## சோமாலியா கடும் சீற்றம்

எதியோப்பியா சோமாலியாவுக் குள் துருப்புக்களை அனுப்பி வருகின்றது என்று சோமாலிய அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

ஒரு தசாப்த காலமாக சோமா லிய குழுக்களுக்கு இடையே இடம் பெற்று வரும் மோதல்களுக்கு முடிவு காண ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தைகளில் இருந்து வெளி நடப்பு செய்யப் போவதாகவும் சோமாலிய அரசாங்கம் அச்சுறுத்தி உள்ளது.

சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் மத்தியஸ்த நாடுகளில் ஒன்றான எதியோப் பியா அதன் அயல் நாடான சோமா லியாவுக்குள் துருப்புக்களை அனுப் பவில்லை. என்று சோமாலியாவின் குற்றச்சாட்டுக்கு மறுப்புத் தெரிவித் துள்ளது.

1991 ஆம் ஆண்டில் சோமா லியாவின் இராணுவ ஆட்சியாளர் முகமட் சியாட் பாரிக் பதவியில் இருந்து கவிழ்க்கப்பட்டதை அடுத்து அந்நாட்டில் வன்முறை நிலவி வருகிறது.

சோமாலியாவில் தற்போது பதவியில் இருக்கும் இடைக்கால தேசிய அரசாங்கம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டில் எதியோப்பியப் படைகளும் டாங்கிகளும் சில தினங்களுக்கு முன்னர் சோமாலி யாவின் தென் பகுதிக்கூடாக உள்ளே பிரவேசித்ததாக தெரிவித் துள்ளது.

# யுத்தத்திற்கு ஆதரவளிப்பது மிகவும் சிரமமானதொன்று

## பாகிஸ்தான் தெரிவிப்பு

ஈராக்கிற்கு எதிரான யுத்தத்திற்கு ஆதரவு வழங்குவது மிகவும் சிரமமானது என பாகிஸ்தான் கூறு கிறது. அத்துடன் ஈராக் விடயத்தில் சமாதானம் ஏற்பட மேலும் அவகா சம் வழங்கப்பட வேண்டும்.

அமெரிக்காவின் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருக்க பாகிஸ் தானின் அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக பாகிஸ்தானின் ஆளும் முஸ்லிம் லீக் கட்சியின் சிரேஷ்ட அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

# அமெரிக்காவின் தன்னிச்சையான போக்கிற்கு

## ஐ.நா. வழியமைக்குமா?

"எதிர்வரும் 17ஆம் திகதி ஈராக் ஆயுதங்களை களைவதுடன் அழிக்காதும் விட்டால், போரைச் சந்திக்க நேரிடும்" என அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின் போன்ற நாடுகள் புதிய தீர்மானம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளன.

அணு ஆயுதங்களை அழிக்க சதாம் ஹுசைனுக்கு இது இறுதி வாய்ப்பு என்றும், செவ்வாய்க்கிழமை (நேற்று முன்தினம்) ஐ. நா. பாதுகாப்புச் சபையில் இத்தீர்மானம் கொண்டுவரவுள்ளதாகவும் அமெரிக்கா எச்சரித்து வந்தது. எனினும் தீர்மானம் எடுப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஈராக் கண்துடைப்புக்காக ஒரு சில அல் - சமுத் ஏவுகணைகளை அழித்துவிட்டு, மறுபக்கம் ஏராளமான ஏவுகணைகளைத் தயாரித்து வருகின்றது. இதனால், ஈராக்கை சும்மா விட்டால் எமது நாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுவிடும். எமது நாட்டின் பாதுகாப்புக் கருதி ஈராக் மீது போர் தொடுக்க நிச்சயித்துள்ளமைக்கு ஐ. நா. சபை கட்டாயம் அனுமதி வழங்க வேண்டும். இல்லை யேல் எமது நாட்டை ஈராக்கிடம் இருந்து பாதுகாத்துக் கொள்ள எமக்கு ஐ.நா.வின் அனுமதி தேவையில்லாமல் கூடப் போகலாம் என்று அமெரிக்க சனாதிபதி புஷ் எச்சரித்துள்ளார்.

மறுபுறம், எமக்கு ஈராக் மீது எவ்வித கோபமுமில்லை. சதாம் ஹுசைன்' பேரழிவு ஆயுதங்களை வைத்திருப்பது பற்றி உலக மக்கள் நன்றாகவே உணர்ந்துள்ளார்கள். அதைவிட ஈராக் மக்கள் கூட 'சதாம் ஹுசைன்' பேரழிவு ஆயுதங்களை அழிக்க வேண்டும் என்று தான் விரும்புகின்றார்கள். ஏனோ 'சதாம்' பிடிவாதம் பிடித்து, ஐ.நா. சபையையும், உலக நாடுகளையும் ஏமாற்றி வருகின்றார். இதனால்தான் போர் என்று 'புஷ்' கூறிக்கொள்ளும் சமாதானத்தை ஏனோ ஐ.நா. சபையில் ரஷ்யா, பிரான்ஸ் போன்ற நாடுகள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதுடன், மக்கள் ஆர்ப்பாட்டங்களிலும் தொடர்ந்து ஈடு படுவது இவரது சமாதானம் பொய் எனும் அளவிற்கு வளர்ந்துள்ளது.



போரை எதிர்க்கும் பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா பிரதமர்களுடன் பாப்பரசர்.

ஐ. நா. வைச் சேர்ந்த 02 ஈராக்கியர்களை (ரகுமான், சௌவுல்) நாட்டைவிட்டு வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது. தமது பணிக்கு சம்பந்தமில்லாத, தேசிய பாதுகாப்பிற்கு ஊறுவிளைவிக்கக் கூடிய நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபட்டார்கள் என இவர்களின் பெயரில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேபோல், அமெரிக்க நலன்களுக்கு ஊறு செய்யக்கூடும் எனும் அடிப்படையில், 60 நாடுகளில் உள்ள 300 ஈராக்கிய தூதர்களை வெளியேற்றும்படி அமெரிக்கா அந்நாடுகளிடம் கேட்டுள்ளது.

இதனையடுத்து அவுஸ்திரேலியா, தனது நாட்டிலுள்ள ஈராக்கிய தூதர்களை வெளியேறும்படி காலக்கெடு விதித்துள்ளது. ஏனைய நாடுகளும் 'புஷ்ஷின்' குற்றச்சாட்டை தாரகமந்திரமாகக் கொண்டு ஈராக்கிய தூதர்களை வெளியேறச் சொல்லலாம்.

"ஈராக் தனது ஆயுதங்களை அழிக்க இறுதி சந்தர்ப்பம் ஒன்றை வழங்க வேண்டும்" எனும் பரிந்துரையை பிரிட்டன் தான் முதலில் ஐ.நா. வில் முன்வைத்தது.

**அ. கலைவாணி**

ஏனெனில், ஈராக் தொடர்பான போருக்கு உலக நாடுகளில் எழுந்துள்ள எதிர்ப்புக்கள், பிரிட்டனில் பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், பிரிட்டன் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு, ஆளும் தொழிற் கட்சிக்குள்ளிருந்து கடும் எதிர்ப்பு என்பன பிரதமர் 'ரொனி பிளேயரின்' ஆட்சிக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ எனும் அச்சம் தான் இப்பரிந்துரைக்குக் காரணம்.

ஆனால், ஈராக் தொடர்பான 2ஆவது தீர்மானத்தை பாதுகாப்புச் சபையில் தாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்று கடந்த மார்ச் 05 ஆம் திகதி பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா கூட்டாக அறிவித்துள்ளன.

இந்நிலையில், இந்த 03 நாடுகளின் முடிவை ஆதரித்து, ஐக்கிய நாடுகள் சபையின் வீட்டோ (Veto) அதிகாரத்தை பெற்றிருக்கும் சீனாவும்ஒருமித்தகருத்தை வெளியிட்டுள்ளது.

இதனால், கடும் எதிர்ப்புக் காரணமாக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின் இவற்றின் இரண்டாவது தீர்மானம் வெற்றிபெற 09 வாக்குகள் கிடைப்பது கடினமாகியுள்ளது.

இதனால், கோபமடைந்துள்ள, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் 'கொலின் பவல்' சர்வதேச சமூகத்தை ஈராக்கிய அதிபர் 'சதாம் ஹுசைன்' கருத்தளவில் பிளவுபடுத்த அனுமதிக்கக்கூடாது என்று எச்சரிக்கை செய்துள்ளார்.

அத்துடன், ஆயுதங்களைக் களையும் விடயத்தில் ஈராக், தாமதமாக செயற்படுவதுடன், மிகக் குறைந்த நடவடிக்கைகளையே மேற்கொண்டு வருவதால், இது சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் செயல் என்பதுடன் சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளை தாமதப்படுத்தும் முயற்சியும் ஆகும் என்றும், ஈராக், ஈரான், சீனா, பர்மா, வடகொரியா, சூடான் இவை மத சுதந்திரத்தை மீறும் நாடுகள் என்றும் குற்றம் சாட்டியுள்ளார்.

60,000 துருப்புக்களை துருக்கியில் நிறுத்த அனுமதிக்குமாறு நேட்டோ கூட்டணியில் இடம்பெறும் துருக்கியிடம் அமெரிக்கா கேட்டிருந்தது.

ஏனெனில், ஈராக் மீதான போரில் வடக்குப் பகுதியில் துருக்கியின் உதவி அமெரிக்காவுக்கு கட்டாய தேவையாகும். இதற்கான மில்லியன் ரூபா இழப்பீட்டை அமெரிக்கா வழங்குவதாகவே கூறியிருந்தது.

ஆனால், துருக்கி நாடாளுமன்றத்தில், அமெரிக்கப் போர் விமானங்களை, துருப்புக்களை நிறுத்த அனுமதி வழங்குவது தொடர்பான பிரேரணையில், 250 பேர் ஆதரவாகவும், 264 பேர் எதிராகவும் வாக்களித்தமையினால் துருக்கி சங்கடமான நிலையில் மறுப்புக் கூறியுள்ளது. அமெரிக்காவுக்கு ஆதரவு கொடுத்தால் உள்நாட்டில் ஆதரவு இழக்கும் நிலை உள்ளது. அதேவேளை அமெரிக்காவுக்கு முடியாது என்று கூறுவதால், அமெரிக்கா விலகிச் செல்வதோடு, போருக்குப் பின்னான ஈராக்கின் நிகழ்வுகளில் தாக்கம் ஏற்படுத்தவல்ல செல்வாக்கை இழக்க நேரிடும் என துருக்கி பிரதமர் 'அப்துல்லா குல்' "திரி சங்கு நிலையில்" சங்கடத்துக்கு உள்ளாகியுள்ளார்.

துருக்கி இணங்காமையினால், தமக்கு ஏமாற்றம் ஏற்பட்டுள்ளபோதும், அமெரிக்கா இப்போதும் துருக்கியின் நண்பனாகவே உள்ளது. துருக்கியுடனான உறவு எமக்கு முக்கியமானது என துருக்கிக்கான அமெரிக்க தூதர் கூறிக் கொண்டிருக்கின்றார்.

ஈராக்கை சுற்றியுள்ள நாடுகள் சிலவற்றில் துருப்புக்களை குவித்துள்ள அமெரிக்கா, தற்போது 05 விமானதாங்கிக் கப்பல்களையும் வளைகுடாக் கடலில் நிறுத்தி வைத்துள்ளது.

அத்துடன், ஒரு அமெரிக்க விமானம் தாங்கிப் போர் கப்பல் வளைகுடாப் பகுதி நோக்கி புறப்பட்டுள்ளது. கலிபோனியா மாகாணத்திலுள்ள சாண்டிகோ கப்பல் படைத் தளத்தில் இருந்து புறப்பட்டுள்ள இக்கப்பல் அணுசக்தி மூலம் இயங்கக் கூடியதுடன், 8000 வீரர்களையும் உள்ளடக்கியுள்ளது.

இதைவிட வளைகுடாவிற்கு இன்னும் 60,000 துருப்புக்களை மேலதிகமாக அனுப்ப அமெரிக்க இராணுவத் தலைமையகமான "பென்டகன்" உத்தரவிட்டுள்ளது. அமெரிக்க அதி நவீன பி.52 ரக குண்டு வீசும் விமானங்கள் கடந்த 03 ஆம் திகதி பிரிட்டனில் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இதே நேரம், ஈராக் மீது போர் வேண்டாமென "பாப்பரசர் ஜோன் போல்" தனது தூதரான "கர்தினால் பியோலாகியை" அமெரிக்க ஜனாதிபதி 'புஷ்ஷிடம்' அனுப்பி வைத்த போதும் 'புஷ்' அவரது கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

அதே நேரம், ஐ.நா.பாதுகாப்புச் சபையில் உள்ள, போரை எதிர்க்கும் நாடுகளின், குறிப்பாக ஜேர்மன் சீனா, ரஷ்யா, பிரான்ஸ், தூதர்களுக்கு வரும் ஈ-மெயில்களை இடைமறித்து செய்திகளை அறியும் இரகசியப் பணியிலும் அமெரிக்காவின் பாதுகாப்பு அமைப்பான 'பென்டகன்' ஈடுபட்டு வருகின்றது.

மறுபுறம், ஐ.நா.பாதுகாப்புச் சபையின் ஆயுதப் பரிசோதனைக் குழுத்தலைவர் 'ஹான்ஸ் பிலிக்ஸ்' ஈராக்கிடம் உள்ள அல்- சமுத்-2 ஏவுகணைகளை அழிக்குமாறு கூறியதை அடுத்து, ஈராக் இதுவரை ஒரு வார காலத்தினுள் 40 ஏவுகணைகளை அழித்துள்ளது. இன்னும் 09 ஏவுகணைகளை அழிக்க முன்வந்துள்ளது.

ஐ.நா. அனுமதி இன்றியே போர் தொடங்கும் என அமெரிக்கா அச்சுறுத்தல் தொடர்ந்தும் விடுக்குமானால், ஏவுகணைகளை அழிப்பதை நிறுத்திவிடப் போவதாக ஈராக் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஈராக் எல்லையையொட்டியுள்ள குவைத் எல்லையில் ஈராக் ஏராளமான டாங்கிகளையும், இராணுவ வீரர்களையும் குவித்து வருகின்றது. அமெரிக்கா ஈராக் மீது போர் தொடுத்தால் இன்னுமொரு வியட்னாம் போரை சந்திக்க நேரிடும் என 'சதாம் ஹுஷைன் சூழுரைத்துள்ளார்.

ஈராக் அல்-சமுத் ஏவுகணைகளை அழிப்பதுடன்,நன்றாகவே ஒத்துழைப்புத் தருகின்றது என ஆயுத ஆய்வாளர்களின் தலைவர் 'ஹான்ஸ் பிலிக்ஸ்' பச்சைக் கொடி தூக்கியுள்ளார்.

அதே போல், ஐ.நா.பொதுச் செயலாளா ""கொபி அனானும்" போரைத் தவிர்ப்பது எப்படி என தீவிரமாக ஆராய்ந்து வருகின்றாராம்.

ஆனால், ஈராக்கில் எதிர்க் கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒன்றுகூடி ஆலோசனைக் கூட்டம் ஒன்றைக் கூட்டி, அதில் 'புஷ்ஷிற்கு' ஆதரவாக தமது கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

தற்போதைய நிலையில் பிரிட்டன் பிரதமர் 'ரொனி பிளேயர்' சீனாவிடம் சென்று தமக்கு ஆதரவு வழங்குமாறு கேட்டிருந்தார்.

ஆனால், சீனப்பிரதமர், "ஈராக் பிரச்சினை ஐ.நா. கட்டமைப்பினுள் அரசியல் ரீதியாக தீர்க்கப்பட வேண்டும்." என்று ரொனிபிளேயரின் கோரிக்கையை நிராகரித்து விட்டார்.

ஐ.நா.சபை அனுமதி இல்லாமல் சதாம் ஹுஷைன் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதாக இருந்தால் பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயர் அமைச்சரவையில் இருந்து இராஜினாமா செய்ய வேண்டி வரும் என பல அமைச்சரக உதவியாளர்கள் அச்சுறுத்தியுள்ளனர்.

அது மட்டுமன்றி, ரொனி பிளேயரின் அரசாங்கத்திலுள்ள சர்வதேச அபிவிருத்தி அமைச்சர், ஐ.நா.சபை அனுமதி இன்றி ஈராக் மீதான போருக்கு பிரிட்டன் துணை போனால், தாம் பதவி விலகப் போவதாக பகிரங்கமாக நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

அதே போல் "பாலைவனப் புயல்-II" எனப் பெயரிட்டு அமெரிக்கா தொடங்கும் போருக்கு பிரிட்டன் ஆதரவு வழங்குமானால், எதிர்க் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிப்பதுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களும் பதவி விலகுவதாக நேற்று எச்சரித்துள்ளனர்.

இதனிடையே, அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், இந்தோனேசியா,இத்தாலி, ஆகிய நாடுகளில் தொடர்ந்தும் ஈராக் மீதான போரைக் கண்டித்து ஆர்ப்பாட்ட கண்டன ஊர்வலங்கள் தொடர்ந்தவாறே இருக்கின்றன.

அமெரிக்கா,பிரிட்டனின் இராஜதந்திர முயற்சிகள், இரகசிய சந்திப்புக்கள், என்பன மேற்கொள்ளப்பட்ட போதும், ஏனோ 15 உறுப்பு நாடுகளிடையேயும் ஒத்த கருத்து ஏற்படவில்லை.

அதனால் அமெரிக்கா, பிரிட்டன், ஸ்பெயின் போன்ற நாடுகளின் இரண்டாவது பிரேரணை மீது நேற்று ஐ.நா சபையில் வாக்கெடுப்பு நடைபெற இருந்ததாயினும் பின்னர் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

எனினும் பிரான்ஸ், ரஷ்யா, சீனா, ஜேர்மனி போன்ற வீட்டோ(Veto) அதிகாரம் பெற்ற நாடுகள் எதிர்ப்பதாக ஒரு வார காலத்திற்கு முன்பே கூறிவிட்டன.

ஆனால், ஐ.நா. சபையின் அனுமதி இன்றியும், ஈராக் மீதான போர் தொடரும் எனக் கூறும் புஷ், ஒருபோதும் ஐ.நா. சபை அனுமதி இன்றி போர் தொடங்கப் போவதில்லை என இராஜதந்திர வட்டாரங்களில் அபிப்பிராயமுள்ளது.

எனவே, "அடிக்கு மேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்" என்று, வீட்டோ அதிகாரம் பெற்ற நாடுகளை தனது கருத்துக்கு ஒத்துழைக்குமாறு புஷ் இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்வாரேதவிர, தனித்துப் போரை எதிர்கொள்வது என்பது நம்பிக்கையற்ற ஒரு சூளுரைப்பு ஆகும். □

# பலஸ்தீனத்திற்கு புதிய தலைமை பிரச்சினைக்குத் தீர்வாகுமா?

பலஸ்தீனத்தில் மீண்டும் அமைதி நிலை தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாக்கப்படுகின்றது. பலஸ்தீன தலைவரும் அதன் சனாதிபதியாகவும் விளங்கும் யசீர் அரபாத் அதற்கு மீண்டும் வழியமைத்துக் கொடுத்திருக்கின்றார். சர்வதேச சமூகத்தின் முன் முயற்சிகளுக்கு மத்தியில் இந்த அமைதி நிலை தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

யசீர் அரபாத் நீண்டகால இடைவெளியொன்றிற்குப் பின்னால் வற்புறுத்தல்களுக்கு மத்தியில் தனக்குரிய அதிகாரங்களை பகிர்ந்தளிக்க இணங்கியுள்ளதோடு, அதற்குரிய முன் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

பலஸ்தீன விடுதலை அமைப்பில் அரபாத்திற்கு அடுத்த நிலையிலிருக்கும் அறுபத்தெட்டு வயதான மஹ்மூத் அப்பாஸ் பலஸ்தீனத்தின் புதிய பிரதமராக நியமிக்கப்பட பிரேரிக்கப்பட்டுள்ளார்.

அரபாத்தைப்போல் அல்லாமல் பிரபல்யம் பெறாத அப்பாஸ் அமெரிக்காவினதும், இஸ்ரேலினதும் மதிப்புக்குரியவராகத் திகழ்வார் என நம்பப்படுகின்றது. அத்தோடு, அரபாத்திற்கு பின் பலஸ்தீனத்தின் பொருத்தமான தலைவர் என்கிற தகுதியும் இவருக்குண்டு.

பலஸ்தீன நிர்வாகம் புதிதாக பிரதமர் பதவியொன்றை ஏற்படுத்துவதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. அத்தோடு, பலஸ்தீன சட்ட சபை பிரதமருக்குரிய கடமைகளையும், உரிமைகளையும் வரையறுக்கும் வகையிலான ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றது. அப்பாஸின் பொறுப்பில் அரச நிர்வாக நடவடிக்கை விடப்படும் எனவும் அரபாத் பாதுகாப்பு மற்றும் சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கை என்பனவற்றை கவனித்துக் கொள்வார் எனவும் ஊகங்கள் வெளியாகி வருகின்றன.

இந்த சமாதான முயற்சிக்குப் பின்னால் சர்வதேச சமூகத்தின் ஆதரவு பெருமளவுக்கு உண்டு என்பது உண்மை. அதாவது, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா ஆகிய நான்கு தரப்புக்கள் இணைந்து கொடுத்த நேரடியான அழுத்தமே அரபாத் தற்போது அதிகாரப் பகிர்வை ஏற்படுத்த முன்வந்தமைக்கான முக்கிய காரணமாகும். அதிகார சபையை மறு சீரமைத்து அதன் அன்றாட நடவடிக்கைகளை கவனிப்பதற்கு அதிகாரம் வாய்ந்த பிரதமரை நியமிக்குமாறு அவை தொடர்ந்து நிர்ப்பந்தித்து வந்தன. இது தவிர இஸ்ரேலும் யசீர் அரபாத் தலைமைப் பொறுப்பில் தொடர்ந்து இருப்பின் பேச்சுக்களுக்கு இடமேயில்லை எனக் கூறிவந்துள்ளது. அமெரிக்காவும் யசீர் அரபாத்தை அகற்றி விடவே பெரிதும் விரும்பியதுடன் அதற்கான நிர்ப்பந்தங்களிலும் ஈடுபட்டிருந்தது.

இந்த அதிகாரப் பகிர்ந்தளிப்பு 2005இல் பலஸ்தீன தனிநாட்டு உருவாக்கத்துக்கான முதல்படி என இந்த நால்வர் தரப்பும் வலியுறுத்தி வந்துள்ளபோதிலும் அவை சாத்தியமாகுமா என்பது கேள்விக்குரிய தொன்றாவே இருக்கிறது.

இஸ்ரேல், பலஸ்தீன பகுதிகளைத் தொடர்ந்து ஆக்கிரமித்துக் கொண்டுள்ளதுடன், அவ்வப்போது பலஸ்தீன மக்களைக் கொன்று குவித்தும் வருகின்றது. பலஸ்தீன பகுதிகளில் அடிக்கடி ஊடுருவும் இஸ்ரேலியப் படையினர், மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். பலஸ்தீன தீவிரவாத அமைப்புக்களில் ஒன்றான ஹமாஸ் இஸ்ரேலியப் படையினர் மீதும் யூதக் குடியேற்றப் பகுதிகள் மீதும் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. இவர்களின் தற்கொலைத் தாக்குதல்களால் இஸ்ரேலிய அரசும், அதன் படைகளும் மக்களும்கூட பெரிதும் கலக்கமடைந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இத்தகைய தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இஸ்ரேலியப் படையினர் பலஸ்தீனப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்துவதாகப் பகிரங்கமாகவே அறிவிக்கும் நிலையில், பலஸ்தீன அகதி முகாம்களே அவர்களின் அண்மைய இலக்காக விளங்குகிறது. எல்லாவற்றையும் இழந்து அகதிகளாக முகாம்களில் தஞ்சமடைந்துள்ள அப்பாவி மக்களை இஸ்ரேலியப் படைகள் கொன்று குவிப்பதையிட்டு சர்வதேசம் பெரிதாகக் கவலை கொண்டிருப்பதாகக் கூடத் தெரியவில்லை. மிக மோசமான மனித உரிமை மீறல்களில் ஒன்றான இதனை ஏன் தடுத்து நிறுத்த அழுத்தங்களை இஸ்ரேல் மீது பிரயோகிக்கவில்லை.

அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் தனது செல்வாக்கை நிலை நிறுத்திக் கொள்ள இஸ்ரேலையே முக்கியமாகப் பயன்படுத்தி வருகின்றது. இஸ்ரேல், சுற்றி வரவுள்ள அயல் நாடுகள் அனைத்தையும் அச்சுறுத்தும் வகையில் உள்ளதற்கு அமெரிக்கா அனைத்து வகையிலான உதவிகளையும் அதற்கு வழங்கி வருகின்றதே காரணமாகும். சுருக்கமாகச் சொல்லப் போனால் இஸ்ரேல் அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாகவே இருந்து வருகின்றது. இந்நிலையில், இஸ்ரேலினால் மேற்கொள்ளப்படுகின்ற கொடூரங்களை கண்டிக்கவோ, தடுத்து நிறுத்தவோ அமெரிக்கா முன்வராமை ஆச்சரியமளிக்கத்தக்கதொரு விடயமாக இருக்கப்போவதில்லை. அத்தோடு, உலக நாடுகளும் எமக்கேன் வம்பு என இருந்து கொள்கின்றன.

இந்நிலையில், இஸ்ரேலில் தேர்தல் நடைபெற்று, புதிதாக அரசும் பதவியேற்றுக் கொண்டுள்ளது. எனினும், ஆளும் தரப்பில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. முன்னைய ஏரியல் ஷெரோன் தலைமையிலான அரசே மீண்டும் ஆட்சிக்கு வந்துள்ளது. எனினும், இடதுசாரிகளின் செல்வாக்கு அரசில் தற்போது காணப்படுகின்றது. அதாவது, தற்போது இடதுசாரி கட்சிகளின் துணையோடே அவர் தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபித்துள்ளார். அண்மையில், நடைபெற்ற நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பில் 68 பேர் ஆதரவாக வாக்களித்தனர். 120 பேர் கொண்ட நெஸட் என்று சொல்லப்படுகின்ற அவையில் 114 பேர் வாக்களிப்பில் பங்கேற்றனர்.இதில் 46 பேர் எதிராக வாக்களித்தனர். 22 அதிகப்படியான வாக்குகளால் ஷெரோன் அரசு தப்பிப் பிழைத்துள்ளதாயினும் இடதுசாரிகள் துணையோடான அரசு பெரிதாக ஒன்றையும் செய்துவிடப்போவதில்லை என்றே பலஸ்தீன தரப்பு நம்புகின்றது.

இவற்றிற்கு மாறாக அண்மைக் காலத்தில் பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலிய இராணுவத் தாக்குதல்களே அதிகரித்துக், காணப்படுகின்றன. ஏரியல் ஷெரோன் மீண்டும் பிரதமராகப் பதவியேற்ற பின்னர் தாக்குதல்கள் தீவிரமடைந்திருப்பது அவதானிக்கப்படுகின்றது.

இந்நிலையில், பலஸ்தீனர்களுடன் சமரசம் ஒன்றுக்கு ஏரியல் ஷெரோன் வந்து விடுவார் என்றோ, பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து படைகளை விலக்கி அவற்றை பலஸ்தீனர்களிடமே நிர்வகிக்க ஒப்படைப்பார் என்றோ கருதிவிட இடமில்லை. பலஸ்தீன அதிகார அமைப்பு நிர்வாகப் பகிர்ந்தளிப்பை அரபாத் மேற்கொள்ளும் போதிலும் பெரிதாக அதனால் பயனேதும் கிடைத்து விடுமா என்பதும் கேள்வியே, ஏனெனில் கடந்த கால அதிகார சபையானது எந்தளவிலான அதிகாரத்தைக் கொண்டிருந்ததென்பதும் அதனால் சுயமாக செயற்பட முடியாமல் இருந்தமையும் வெளிப்படையாகத் தெரிந்த விடயங்களே.

இஸ்ரேலியர்கள் மீது பலஸ்தீன தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது ஒன்றும் புதுமையானதும் அல்ல. ஏனெனில், பலஸ்தீன பகுதிகளில் உள்ள யூதக் குடியேற்றங்களையும், இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு படைகளையும் வெளியேற்றிடவே இவர்கள் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அத்தோடு, அரபாத்தினால் அமைக்கப்பட்டிருந்த அதிகாரசபை குறித்தும் போதிய நம்பிக்கையை ஹமாஸ் தீவிரவாத அமைப்பு கொண்டிருக்கவில்லை.

இதற்கும் காரணம் இல்லாமலில்லை. ஏனெனில், அரபாத்திற்கோ, அவரின் அதிகார சபைக்கோ ஆட்சி செலுத்தப் போதியளவு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவு கடந்த இரண்டரை வருட காலமாகப் பலஸ்தீன பகுதிகளில் தொடரும் மோதல்கள் ஆகும். சுயமாக அவர்கள் செயற்பட அனுமதிக்கப்பட்டிருந்தால் இத்தகைய நிலைமை மீண்டும் உருவாகியிருக்காது.

பலஸ்தீன அதிகார அமைப்புக்குள்ளேயே முரண்பாடுகள் காணப்படுகின்றன. தற்போது பிரதமராக பதவியேற்கும் மஹ்மூத் அப்பாஸ் தனக்குப் போதியளவு அதிகாரங்கள் வேண்டும் என்கிறார். ஆனால் அரபாத்தோ தொடர்ந்தும் தன்வசம் அதிகாரங்களை வைத்துக் கொள்வதற்கே விரும்புகின்றார்.பெரிதாக விட்டுக் கொடுப்புக்களைச் செய்வார் என்று கூடக் கருத முடியாது. ஏனெனில் மிகுந்த நிர்ப்பந்தங்களுக்கு மத்தியிலேயே அவர் இந்த முடிவுக்கு வந்துள்ளார்.

தற்போது மத்திய கிழக்கில் விஸ்வரூபம் பெற்றுள்ள ஈராக் பிரச்சினை ஒரு வகையில் இஸ்ரேல்-பலஸ்தீன முறுகல் நிலையை ஓரளவுக்குத் தணிக்கக் காரணமாக இருக்கலாம். அமைதி முயற்சிக்கு பிரதான பங்காற்றுபவர்களில் ஒருவராக விளங்கும் அமெரிக்கா, மத்திய கிழக்கு பிராந்தியத்திலுள்ள மற்றய நாடுகளில் அதுவும் தனது நலனுக்கு பங்கம் ஏற்பட்டு விடுமோ எனக் கருதும் நாடுகளில் தற்காலிகமாகவாவது அமைதியை ஏற்படுத்திவிட்டு அதனூடாகப் பெரும் பலனைப் பெற்றுக் கொள்ள

**● அனிக்கிலஸ்**

கங்கணம் கட்டி நிற்கிறது. இஸ்ரேலில் அமைதியான சூழல் பேணப் படுவதையே அமெரிக்கா தற்போதைக்கு பெரிதும் விரும்புகின்றது. இந்த வகையில் இஸ்ரேல் - பலஸ்தீன அமைதி நடவடிக்கை ஒரு தற்காலிகமானதென்றே துணிந்து கூறலாம்.

இஸ்ரேல்-பலஸ்தீனம் இடையிலான மோதல்களால் இதுவரை 19880 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு விட்டனர். கணக்கிலிட முடியாத வகையில் சொத்தழிவுகள் ஏற்பட்டுவிட்டன. அவர்களது வாழ்வு சிதைக்கப்பட்டு விட்டது. 706 இஸ்ரேலியர்கள் இதுவரையில் கொல்லப்பட்டிருப்பதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவையனைத்தையும் பார்க்குமிடத்து பலஸ்தீனத்தில் அமைதியான சூழல் ஒன்று உருவாவது வரவேற்கத்தக்கது. அந்த மக்களின் சுதந்திரமான வாழ்விற்கு இதனூடாக வழி ஏற்படுமா என்பது தான் தற்போதைய கேள்வி. தற்காலிகமான அமைதி நிலையாக இது மாற்றம் பெறுமா என்பதை விடுத்து ஆக்கபூர்வமாக மனிதாபிமானத்துடன் இப் பிரச்சினை அணுகப்பட வேண்டும் ஆனால் இது சாத்தியமாகுமா?

இஸ்ரேலியப் படையினரால் அழிக்கப்பட்ட கட்டடமொன்றின் தோற்றம்



# புலிகள் கப்பல் மீதான தாக்குதலுக்கு வெகுசன அமைப்புக்கள் கண்டனம்

**சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் சிறிலங்கா கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டமைக்கு வெகுசன அமைப்புக்கள் பல கண்டனம் தெரிவித்துள்ளன.**

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் கண்டன அறிக்கை ஒன்றை விடுத்துள்ளதுடன் கதவடைப்புக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

அது விடுத்த அறிக்கையில்:

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த புலிகளும், சிறிலங்கா அரசும் தம்மை அர்ப்பணித்து, விடாமுயற்சியில் தொடர்ந்த வண்ணமுள்ளன. அத்தோடு இன மொழி வேறுபாடு இன்றி மக்கள் அனைவருமே எப்போது சமாதானம் மலரும் என்ற அங்கலாய்ப்பில் இருக்கின்றனர். இவ்வேளையில் கடந்த 10.03.2003 அன்று முல்லைத் தீவிற்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து சிறிலங்கா கடற்படையால் விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தில் அதில் 11 புலிகள் வீரச்சாவடைந்தமை கண்டனத்துக்குரியது. இதுபோன்ற செயல் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள வேளை தமிழ் மக்கள் சார்பாகவும், வெகுசன அமைப்புக்கள் சார்பாகவும் கண்டனங்களை தெரிவித்ததுடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியுள்ளோம். அவ்வாறு இருந்தும் இது போன்ற நிகழ்வுகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. இவ்வேளை சமாதானத்தை விரும்பும் புலிகள் ஏற்கமாட்டார்கள். இது போன்ற வன்செயல்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வவுனியா மாவட்ட வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் தெரிவித்துக் கொள்கின்றது.

இது தொடர்பாக இன்று 13 ஆம் திகதி வவுனியா மாவட் டம் தழுவிய பூரண கர்த்தாலை யும் அனுஷ்டிக்குமாறு வவுனியா மாவட்ட மக்களை கேட்டுக் கொள்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேசக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பல் சிறிலங்கா கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவத்தை கண்டித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இன்றைய அமைதி நிலையை குழப்பியடிக்கக் கூடிய சிறிலங்கா ஆயுதப்படைகளின் செயற்பாடுகள் மிக மோசமான கட்டத்தை அடைந்திருக்கின்றன.

இத்தகைய பொறுமை இழக்கச் செய்யும் சம்பவங்கள் நிரந்தரமான சமாதானத்திற்கு என்றுமே உதவப் போவதில்லை. மேலும் இத்தகைய சம்பவங்கள் சிறிலங்கா தரப்பு இன்றைய சமாதான முன்னெடுப்புக்களில் இதயசுத்தியுடன் தான் ஈடுபடுகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

இத்தகைய சம்பவங்களை சர்வதேச கண்காணிப்புக் குழு இனியும் சாதாரண விடயங்களாக சமாளித்துவிட முற்படாது. அச்சம்பவங்களின் உண்மைத் தன்மையை இதயசுத்தியுடன் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதே நிரந்தர சமாதானத்திற்காக அவர்கள் செய்யும் மிகப் பெரும் பங்களிப்பாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விண்ணப்பிக்கலாம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு உள்ளடங்கலாக வன்னிப் பெரு நிலப்பரப்பில் கிளித்தட்டு, கபடி ஆகிய போட்டிகளை நடாத்துவதற்கு விளையாட்டுத் துறையின் வன்னி மாவட்ட பிரிவு தீர்மானித்துள்ளது.

இதற்கமைவாக ஆர்வமுள்ள கழகங்கள், பாடசாலைகள் ஆகியவற்றிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆண்கள், பெண்கள் என தனித் தனியாக நடாத்தப்படவுள்ளன. இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களை நாளை 14.ம்திகதிக்கு முன் மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்கள் ஊடாக வன்னி மாவட்ட விளையாட்டுத் துறைச் செயலகத்தில் ஒப்படைக்கும் படி வேண்டப்பட்டுள்ளது. (சோ)

## அடம்பன் பிரதேசத்தில் நெல் அறுவடை விழா

(அலுவலகச் செய்தியாளர்)

அடம்பன் பிரதேசத்தில் கடந்த சனியன்று காலை 10.30 மணியளவில் கறுக்காய்ப் பகுதி இளைஞர் விவசாய அமைப்பினரால் அமைப்பின் தலைவர் தலைமையில் அறுவடைவிழா ஆரம்பமானது.

முதல்நிகழ்வாக மங்கல விளக்கினை மன்னார் மாவட்ட பிரதேச செயலர், மாந்தைப் பிரதேச செயலர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர், உதவி ஆணையாளர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், விவசாய அமைப்பின் சம்மேளனத் தலைவர் ஆகியோர் ஏற்றி வைத்தார்கள். தொடர்ந்து தேசியக் கொடியினை அடம்பன் பிரதேச அரசியல் துறை பொறுப்பாளர் அருணோதயன் ஏற்றி வைக்க நிகழ்வு அகவணக்கத்துடன்ஆரம்பமானது.

நிகழ்வில் நிக் கோட் நிறுவனத்தால் ஆண்டான்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்திற்கு நெல் வெட்ட வழங்கிய இயந்திரத்தால் அறுவடை செய்யும் நிகழ்வு நடைபெற்றது. இறுதியாக கருங்கண்டல் பாடசாலையில்சிறப்புற நிகழ்வுகள் இடம் பெற்றன. நிகழ்வின் சிறப்புரைகளை உதவிப்பணிப்பாளர், விவசாயத்திணைக்களம், கமநல அபிவிருத்தித்திணைக்களம், உதவி ஆணையாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப்பொறுப்பாளர், மாந்தைப் பிரதேச செயலர், பிரதேச செயலர், விவசாய அமைப்பு சம்மேளனத்தலைவர், ஆகியோரின் சிறப்புரைகளுடன் இனிதே நிறைவு பெற்றது. (சோ)

## ஆளணிப் பற்றாக்குறை காரணமாக மேலதிக மாவட்ட பதிவாளர் பணி பாதிப்பு

(அலுவலகச் செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மேலதிக பதிவாளர் பணிமனையில் ஆளணிப்பற்றாக்குறையினால் பதிவுகள் தாமதமாக நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நான்கு எழுதுனர் இருக்க வேண்டிய நிலையில் இருவர் மட்டுமே சேவையில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதனால் காணி உறுதிப் பதிவுகள் தாமதமாக நடைபெறுவதாகவும் ஏனைய பதிவுகள் தொண்டர்கள் மூலமாக நடைபெற்று வருகின்றன.எனவும் இடவசதி நெருக்கடியும் ஏற்பட்டுள்ளது. எனவும் தெரிவிக்கப்படுகிறது. அத்தோடுபதிவினை மேற்கொள்ள வரும் மக்களுக்கு இருக்கைகள்வழங்கப்படாததால் அவர்கள் நின்றே பதிவினை மேற்கொண்டு வருவதை அவதானிக்கமுடிகிறது.இதற்கு சம் பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்குமாறுமக்கள் கேட்டுள்ளனர்.(அ)

## அடிப்படை வசதிகளற்றுள்ள பளைப் பிரதேச பாடசாலைகள்

பளைப்பிரதேசப் பாடசாலைகளில் அடிப்படைவசதிகள், வளங்கள் இன்மை காரணமாகப் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக விளையாட்டுமைதானங்கள் துப்புரவு செய்யப்படாமையால் இல்ல விளையாட்டுப் போட்டி களை நடாத்த முடியாமல் கஷ்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை தளபாடப் பற்றாக்குறை, ஆசிரியர் பற்றாக்குறை ஆகியனவும் காணப்படுகின்றது.

## ஒன்றுகூடல்

கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட வீரர்களை இம் மாதம் 15 ஆம் திகதி (சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஒன்றுகூடுமாறு கரைச்சிப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் சிவனேசன் கேட்டுள்ளார்.

## வள்ளிபுனம் கிராமத்தில் சமகால கருத்துரை நிகழ்வு

(உடையார் கட்டு)

வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் வள்ளிபுனம் கிராம தேசிய எழுச்சிப் பேரவைத் செயலர் தலைமையில் சமகால அரசியல் கருத்துரை நிகழ்வு கடந்த வியாழனன்று மாலை இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்கள், மக்கள், வலயப் பொறுப்பாளர், கிராம அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் கருத்துரைகளை வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய அதிபர் திருமதி முருகையா, தேவிபுரம் கிராம அலுவலர் சொக்கலிங்கம், வள்ளிபுனம் கிராம அலுவலர் சிவராசா, முல்லை மாவட்ட அரசியல் நிர்வாகப்பொறுப்பாளர் இசையழகன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (19)

## எரிபொருளுக்கு பலத்த தட்டுப்பாடு கிளி. நகரில் மக்கள் பெரும் அவதி!

### -அதிகரித்த விலையிலும் விற்பனை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிப் பகுதியில் அண்மை நாட்களாக கடும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

கிளிநொச்சியில் உள்ள கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் பரந்தனில் உள்ள கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் பெற்றோல் முற்றாக முடிவடைந்துள்ளது இதே போன்று தனியார் கடைகளிலும் இவ்வாறான நிலையே காணப்படுவதுடன், ஒரு சிலர் 85 ரூபாய் வரை ஒரு லீற்றர் பெற்றோல் விற்பனை செய்து வருகின்றனர். அத்தோடுமண்ணெண்ணெய்க்கான தட்டுப்பாடும் காணப் படுகிறது.

இதனால்போக்குவரத்து வாகனங்களும் மற்றும் விவசாய நடவடிக்கையின் இயந்திரப் பயன்பாட்டிற்கான எரிபொருள் தேவைக்காகவும், மக்கள் எரிபொருட்களை பெற முடியாது பெரும் இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வருகின்ற வீதிப் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களும், மக்களும் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்வதையும், சில தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களில் கூடிய விலையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எரிபொருட்கள் விநியோகிக்கப்பட்டதையும் நேற்று அவதானிக்க முடிந்தது. (பா)

## புலமைப்பரிசில் பெறும் வருமான உச்சவரம்பு உயர்வு

(கொழும்பு)

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் புலமைப்பரிசில் பெறுவதற்கான வருமான உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பரீட்சைத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரை ஆறாயிரம் ரூபாவுக்கு உட்பட்ட ஆண்டு வருமானத்தை உடைய பெற்றோர்கள் அல்லது சட்ட பூர்வமான பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்கே இத்தொகை வழங்கப்பட்டு வந்தது. இனிமேல் இத் தொகை 24.000ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எதிர்காலத்தில் அதிகமான மாணவர்கள் புலமைப்பரிசில் பெற்றுக் கல்வி பெறும் வாய்ப்பு ஏற்படும்.

இதேவேளை. பல்கலைக்கழக கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு கல்வி பூர்த்தியாகும் வரை வழங்கப்படும் தொகையும் மூவாயிரம் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## 3 மாதங்களில் உரத்தின் விலையை குறைக்க அரசு நடவடிக்கை

### - வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

விவசாயிகள் முகம் கொடுக்கின்ற இடர்பாடுகளை அரசாங்கம் நன்கறியும். எதிர்வரும் 03 மாதங்களுக்குள் உரத்தின் விலையை 200ரூபா தொடக்கம் 300 ரூபா வரை குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பீ-ஹரிசன் தெரிவித்துள்ளார்.

சிராவஸ்திபுரம் பகுதியில் நடைபெற்ற விவசாயிகள் சங்கப் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உரவகைகளின் விலை குறைப்புத் தொடர்பில் அரசாங்கம் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சு வார்த்தை நடாத்தி வருகின்றது. என்றும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு



நாம் விரும்பினாலும், விரும்பாதுவிட்டாலும் போராட்டமே எமது வாழ்க்கையாகவும், வாழ்க்கையே எமது போராட்டமாகவும் மாறிவிட்டது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 13-03-2003


## குழப்பம் தேவையற்றது!

விடுதலைப் புலிகளின் கப்பல் இடைமறிக்கப்பட்ட இடம் குறித்து நேரத்திற்கு நேரம் மாறுபாடான தகவல்களை வெளியிட்டமை குறித்துப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் குழப்பமடைந்துள்ள அதேவேளை, புலிகளின் கப்பலை வழிமறித்ததுடன் சிறிலங்கா கடற்படை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கு தகவல் தந்து தம்மைக் கப்பலுக்கு அழைத்து நிலைமையைக் கண்காணிக்குமாறு கோராமையையிட்டும் கவலையும் அடைந்துள்ளனர்.

ஆனால், சிறிலங்கா அரசு பற்றி அறிந்து வைத்திருப்பவர்கள் எவருமே இவ்வாறு குழப்பமோ, கவலையோ கொள்ளமாட்டார்கள். ஏனெனில், சிறிலங்கா அரசு இவ்வாறு நடந்துகொள்ளும் என்பது எதிர்பார்க்க முடியாததொன்றல்ல. 1987இலும் இந்திய- சிறிலங்கா சமாதான உடன்படிக்கை கைச்சாத்தாகி இருந்தவேளையிலேயே சிறிலங்கா கடற்படை இவ்வாறே நடந்து கொண்டது. சமாதான உடன்பாட்டிற்கு மாறாக லெப்.கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட 12 வேங்கைகளை கடலில் வைத்துக் கைது செய்து அவர்களின் வீரச்சாவிற்குக் காரணமாகியது.

அதாவது, யுத்த நிறுத்த ஒப்பந்தங்கள் மீறிச் செயற்படுவதென்பது சிறிலங்கா ஆயுதப்படைக்கோ அன்றி அதிகாரத்தில் இருப்பவர்களுக்கோ புதியதொன்றல்ல. இதனை அறிந்தவர்கள் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட விவகாரத்தில் சிறிலங்கா கடற்படையும், அதிகாரத்தில் இருப்பவர்களும் நடந்து கொள்வதையிட்டு குழப்பமடைய எதுவுமில்லை.

விடுதலைப் புலிகளின் கப்பலைச் சிறிலங்கா கடற்படை மறித்தபோது அது தரையிலிருந்து 240 மைல்கள் தொலைவிற்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் இருந்தது என்பதே உண்மை. இதனையே கடற்படை முதலில் சிறிலங்கா அரசாங்கத்திற்கும், கண்காணிப்புக் குழுவிற்கும் முதலில் அறிவித்திருந்தது.

ஆனால், அதன் பின்னர் தான் சர்வதேச கடற்பரப்பிற்குள் மறிக்கப்பட்டதான விவகாரம், கடற்படைக்கு உறுத்தியிருத்தல் வேண்டும். சில வேளைகளில் உயர்கட்டளைப் பீடங்களில் இருந்துகூட இவ் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருத்தல் கூடும். இதன் பின்னரே கப்பல் வழிமறிக்கப்பட்ட தூரம் படிப்படியாகக் குறைக்கப்பட்டு 185 மைல் எனக் கூறப்பட்டது. அதாவது, சிறிலங்காவின் கடல் எல்லைக்குள் – பொருளாதார வலயத்திற்குள் – கப்பல் வழி மறிக்கப்பட்டதாக வெளிக்காட்ட முயற்சிக்கப்பட்டது. ஆகையினால்தான், கப்பல் மறிக்கப்பட்ட துரம் குறித்து முன்னுக்குப்பின் மாறாகக் கடற்படை பேசவேண்டியதாகியது.

இது ஒருபுறம் இருக்க – கண்காணிப்புக்குழுவினர் அழைக்கப்படாமல் போனமை கூடத் திட்டமிட்ட நடவடிக்கையே ஆகும். அதாவது, கண்காணிப்புக் குழுவின் பிரசன்னம் சிறிலங்கா கடற்படையின் நோக்கத்தைச் சிதைத்துவிடும் என்பதன் காரணமாகவே கண்காணிப்புக் குழுவினர் அழைக்கப்படவில்லை.

சிறிலங்காவின் கடற்படை விடுதலைப் புலிகளின் கப்பலை வழிமறித்ததுமே அதனை மூழ்கடிப்பதென்ற முடிவிற்கு வந்திருந்தது. ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசாங்கம் இவ்விவகாரத்தில் சற்றுத் தயக்கம் காட்டிய சமயத்தில் கடற்படை, சனாதிபதி சந்திரிகாவின் அனுமதியைப் பெற்றுக்கொண்டு கப்பலை மூழ்கடிப்பதற்கான தாக்குதலை மேற்கொண்டது.

இத்தகையதொரு நிலையில், கண்காணிப்புக் குழுவினருக்குத் தொடர்ச்சியாகக் கப்பல் குறித்த தகவல்களை வெளியிட்டு வருவதோ அன்றி அவர்களை கப்பல் வழி மறிக்கப்பட்ட இடத்திற்கோ அழைத்துச் செல்லுதல் என்பது கடற்படையின் நோக்கத்திற்கு மாறானதொன்றாகும். இந்நிலையிற்தான், கண்காணிப்புக் குழுவிற்கு விரிவான தகவல் வழங்கப்படவுமில்லை. அவர்கள் கப்பலுக்கு அழைக்கப்படவுமில்லை.

இதுதவிர, கப்பலை மூழ்கடிப்பது என்ற தீர்மானத்தில் சிறிலங்கா கடற்படை இருந்ததென்பதற்கு இக்கப்பல் விவகாரத்தை நீண்ட நேரத்திற்கு விட்டு வைக்க அது தயாராக இல்லாமல் இருந்ததனையே காரணமாகச் சுட்டிக்காட்ட முடியும். அதாவது, கண்காணிப்புக்குழு தீவிரமாகச் செயற்படுவதற்கான கால அவகாசத்தைக்கூடச் சிறிலங்கா கடற்படை வழங்கத் தயாராக இல்லை. கப்பலை மூழ்கடித்து விடுதல் என்பதிலேயே அது குறியாக இருந்துள்ளது.

ஆகையால், கப்பலை மூழ்கடித்து விடுதல் என்ற உறுதியுடன் கடற்படை செயற்படுகையில் அது வெளியாரின் தலையீட்டால் தடைப்பட்டுப் போவதை எவ்வாறு அனுமதிக்கும்? இதனைக் கண்காணிப்புக் குழுத் தலைவர்கள் புரிந்து கொள்ளுதல் அவசியமானதாகும். புரிந்துகொள்ளும் பட்சத்தில் சம்பவங்கள் குறித்துக் கண்காணிப்புக் குழுவினர் ஆராயவோ அன்றிக் கவலை கொள்ளவோ வேண்டிய தேவை இல்லை.

# சட்டவிரோத ஆட்கடத்தலைத் தடுக்க கொழும்பில் உலக நாடுகள் மாநாடு

(கொழும்பு)

சட்டவிரோதமாக ஆட்களை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்லல் மற்றும் ஆட்கடத்தல் போன்றவற்றை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆராயும் பொருட்டு 38 நாடுகளின் உயர திகாரிகள் சிறிலங்கா வரவுள்ளனர்.

ஆசிய மற்றும் கடல் வலய நாடுகளைச் சேர்ந்த 70 உயரதிகாரிகள் கலந்து கொள்ளும் மாநாடு இன்றும், நாளையும் கொழும்பில் நடைபெறும் என உள்த்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாநாட்டை உள்த்துறை அமைச்சர் ஜோன்அமரதுங்க உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைப்பார்.

# உடத்தலவின்ன படுகொலை வழக்கின் சாட்சிகளுக்கு தொடர்ந்து அச்சுறுத்தல்

## விசாரணைக்கு சட்டமா அதிபர் பணிப்பு

(கொழும்பு)

உடத்தலவின்ன படுகொலை தொடர்பாக நீதிமன்றத்தில் சாட்சியமளித்ததன் பின்னர் வழக்கின் சாட்சிகளுக்கு ஏற்படும் நெருக்கடிகள் மற்றும் விடுவிக்கப்படும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக விரிவான விசாரணை நடத்துமாறு சட்டமா அதிபர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சட்டமா அதிபரின் இந்தத் தீர்மானம் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற வழக்கு விசாரணையின் போது பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித பெர்ணாண்டோ நீதிமன்றத்தில் அறிவித்தார்.

இந்த வழக்கின் சாட்சியான மீகம்மன பகுதியைச் சேர்ந்த ஐ.ஜி.சரத்குமார அச்சுறுத்தப்பட்டுள்ளதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதே வேளை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் சாட்சியளித்த மற்றுமொரு சாட்சி தனது பெயரை வெளியிட வேண்டாம் என நீதிமன்றில் கேட்டுக் கொண்டார்.

தான் சாட்சியமளிப்பது வெளியில் தெரிந்தால் பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் தம்மை அச்சுறுத்தக் கூடும் என்றும் அவர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

# புலிகளுடன் இணைந்த 4 சிறுவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைப்பு!

(அலுவலக செய்தியாளர்)

வவுனியாவில் விடுதலைப் புலிகளுடன் இணையவந்த 18 வயதிற்கு உட்பட்ட நான்கு சிறுவர்கள் நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதில் இரண்டு சிறுவர்கள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மன்னார் மாவட்டப் பொறுப்பாளருடன் பெற்றோரிடம் ஒப்படைக்க அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் கதிரவன் ஆகியோர் கலந்து கொண்டு சிறுவர்களைப் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# இடம்பெயர்ந்த ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொள்ளக் கோரிக்கை

(கொழும்பு)

1990 ஆம் ஆண்டில் யுத்தத்தால் இடம் பெயர்ந்த ஆசிரியர்களை மீண்டும் சேவையில் இணைத்துக்கொள்ள வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யுத்தம் காரணமாக உயிரைக் கையில் பிடித்தபடி வெளிநாடுகளுக்குப் பலர் சென்றனர். சிலர் உள்ளூரிலேயே தற்காலிகமாகப் பணியாற்றினர்.

யுத்த பீதி காரணமாக இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தினம் வரை, முழுச் சம்பளமும் வழங்க வேண்டும். அத்துடன் அவர்களுக்கான பதவியுயர்வையும் வழங்க வேண்டும் என்று தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# வழக்கில் பங்கேற்றுவிட்டுத் திரும்பிய தம்பதியர் கொலை

(கொழும்பு)

தனியார் பேருந்தில் பயணம் செய்த கணவன் மனைவி தெற்கில் இந்துருவப் பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பலப்பிட்டிய நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கு ஒன்றில் ஆஜராகிவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் இவர்கள் இருவரும் பயணம் செய்த பேருந்து மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி இவர்களை கொலை செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து சிறிலங்கா பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## நச்சு வாயுக் கவசங்கள் தருவிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு அமெரிக்காவிலிருந்து நச்சு வாயுக் கவசங்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

உலகெங்கிலுமுள்ள அமெரிக்க தூதரகங்களின் பாதுகாப்பு அதிகரிக்கப்படுவதன் ஒரு நடவடிக்கையே இதுவெனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சேவையிலிருந்து விலகிய பொலிசாரை மீண்டும் இணைக்க நடவடிக்கை

## - பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

சேவையிலிருந்து விலகிச் சென்ற பொலிஸாரை மீண்டும் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா தெரிவித்துள்ளார்.

விலகிச்சென்றிருந்த காலத்தில் குற்றச்செயல்களில் ஈடுபட்ட, இனம் காணப்பட்டவர்களை மாத்திரம் இணைத்துக் கொள்ள மாட்டோம் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சில பொலிஸார் மாத்திரமே திடீரென விலகிச் சென்றுள்ளனர். இவர்களில் குறைந்த அளவிலானவர்களே சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுள்ளனர். பலர் இன்னும் நற்பிரஜைகளாகவே யுள்ளனர்.

விலகிச் சென்ற பொலிஸாருக்கு எதிராக கடுமையான கட்டுப்பாடுகள் இல்லாத நிலையிலேயே இவர்கள் இவ்வாறு நடந்து கொண்டுள்ளனர்.

அவ்வாறானவர்கள் சுயவிருப்பத்துடன் மீண்டும் பொலிஸ் சேவையில் இணைய முன்வரும் பட்சத்தில் இணைத்துக் கொள்ளப் படுவார்கள் என்றும் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

# புலிகளுடன் கப்பல் மூழ்கடிப்புக் குறித்து மிகவும் அக்கறையுடன் கலந்துரையாடினேன்

## கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர்.ஜெனரல் ரெலிவ்சன்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் சிறிலங்கா கடற்படையினரால் மூழ்கடிக்கப் பட்ட விவகாரம் குறித்து விடு தலைப் புலிகளுடன் மிகவும் அக் கறையுடன் கலந்துரையாடினேன்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடு தலைப்புலிகளின் அரசியல் துறை நடுவப்பணியகத்தில் புலி கள் தரப்பு பிரதிநிதிகளுடனான சந்திப்பை முடித்து வெளி யேறும்போதே எமது செய்தி யாளர் சந்திப்பு பற்றி கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்ப வம் குறித்த தகவல்களை புலிகளி டமிருந்து பெற்றுக் கொண்டுள் ளேன். மேற்கொண்டு சிறிலங்கா அரசாங்கத்துடன் இதுபற்றி பேச்சு நடத்தி நல்ல முடிவுடன் மீண்டும் கிளிநொச்சிக்கு வருவேன் என அவர்மேலும் தெரிவித்தார். (சோ)

# ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்த வவு.தொ.ஆசிரியர்கள் முடிவு

வவுனியா மாவட்டத் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கோரி எதிர்வரும் வெள் ளிக்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றினை நடாத்த வுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

நீண்டகாலமாக எதுவித ஊதி யமும் இன்றி தொண்டு அடிப் படையில் கடமை புரியும் எமக்கு நிரந்தர நியமனம் கோரி நடை பெறும் மாபெரும் ஊர்வலத்தில் வவுனியா மாவட்டப் பாடசாலை களின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விமான்கள், பொது மக்கள் அனைவரும் கலந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (10)

# சிம்பாவ்வேயுடனான ஆட்டத்தில் கென்யா அமோக வெற்றி

உலகக்கிண்ண கிறிக்கெட் போட்டியில் கென்யா அணிக்கும் சிம்பாவ்வே அணிக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற ‘சுப்பர் சிக்ஸ்’ ஆட்டத்தில் கென்யா அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றியீட் டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம் பாவ்வே அணி 45ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கென்யா அணி 26 ஓவர்களில் மூன்று விக்கெட் இழப்பிற்கு 135 ஓட்டங்களைப்பெற்று வெற்றியீட் டியது.

### போர் நிறுத்த...

பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல் வன் அவர்களும், திருமதி அடேல் பாலசிங்கம் அவர்களும் கலந்து கொண்டனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தரப்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரெலிவ்சன், கக்றன் உலஸ்றிமா், எரிக்பீற்றசன், கண்காணிப்புக் குழு வின் சட்ட ஆலோசகர், கடல் கண் காணிப்புக்குழு அதிகாரி ஆகி யோர் கலந்து கொண்டனர்.

மேற்படிச் சந்திப்பு இரண்டு மணி நேரம் இடம்பெற்றது. முன்ன தாக போர் நிறுத்தக் கண்காணிப் புக் குழுத்தலைவர் ரெலிவ்சன் மற்றும் குழுவினர் உலங்கு வானூர்தி மூலம் நேற்று பி.ப. 1.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தை வந் தடைந்தனர். அவர்களை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப் பாளர் சோ. தங்கன் அவர்கள் வரவேற்று கிளிநொச்சி கண் காணிப்புக்குழு செயலகத்திற்கு அழைத்துச் சென்றமை குறிப்பிடத் தக்கது. (சோ)

### ஐ.நா.

ஆணைக்குழுத் தரப்பில் அதன் தலைவர் இயன்மாட்டீன் மற்றும் அவரின் குழுவினைச் சார்ந்த மூவரும் கலந்துகொண்டனர்.

இதனை அடுத்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா அவர்களை நீதிமன்ற வளாகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

மேற்படி சந்திப்பு நேற்று பகல் 10.30 முதல் 12.30 வரை கிளி நொச்சி நீதிமன்றவளாகக் கட்ட டத்தில் நடைபெற்றது.

தமிழீழ நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா அவர்களுடன் தலைமை நீதியாளர் ஒப்பிலான், மேன்முறையீட்டு மன்ற நீதியாளர் சுகிதரன், ஓய்வுபெற்ற நீதிபதி ஏகநாதன், சட்டவாளர் கோடீஸ் வரன் ஆகியோருடன் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலை வர் இயன் மாட்டீன் அவர்கள் இருமணி நேரம் கலந்துரை யாடலில் ஈடுபட்டார்.

இதன் பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் இருந்து 3.30 மணி வரையும் அனைத்து நீதியாளர் களையும் சந்தித்து மனித உரிமை கள் பற்றிக் கலந்துரை யாடியுள்ளனர். (சோ)

### படையினரின்....

வெளியிட இருக்கின்றார்கள். அவர்களது அறிக்கை முக்கிய மானது.

இன்றைய பேச்சுவார்த்தையின் போது நாம் எமது நிலைப்பாட்டை விளக்கினோம். அதாவது முத லாவதாக இந்த சம்பவம் 220 கடல் மைல்களுக்கப்பால் திரு கோணமலைக்கு மேலே ஆழ் கடலில் நடைபெற்றுள்ளது. இது சர்வதேசக் கப்பல் போக்கு வரத்துப் பாதையில் நடைபெற் றுள்ளது. ஆகவே இந்த சர்வ தேசக் கடலில் ஒரு வர்த்தகக் கப் பலை தடுத்து நிறுத்தித் தாக்குதல் நடத்துவதென்பது சர்வதேச சட்டத்திற்கு மாறானது. அத்துடன் போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயலாகும். இவ்வாறான சம் பவம் இதுவரைகாலமும் நடை பெறவில்லை. இது கடற்படையின் அடாவடித்தனமான ஆத்திரமூட்டும் போர்ச் செயலாகவே நாம் கருது கிறோம். எமது இந்த நிலைப் பாட்டை அவர்களுக்கு விளக்கி னோம். முதலாவது இச்சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் பணிப்பின் பேரில் கண்காணிப்புக்குழுத் தலைவருடன் நான் தொடர்பு கொண்டு இச்சம்பவம் பற்றி குறிப்பிடும் பொழுது கடற்படை யினரின் அறிக்கை ஒன்று தமக்கு வந்திருப்பதாகவும், 220 கடல் மைல்களுக்கப்பால் இச்சம்பவம் நடைபெறுவதாகவும் அவர் எனக் குச் சொன்னார். ஆகவே சிறிலங் காக் கடற்படை கண் காணிப்புக் குழுவிற்குக் கொடுத்த அறிக்கை யில் இந்தச் சம்பவம் 220 கடல் மைல்களுக்குக்கப்பால் அதாவது இலங்கையின் பொருளாதார வல யத்திற்கு அப்பால் நடைபெற் றுள்ளது என குறிப் பிடப்பட் டுள்ளது.

இதுவரை காலமும் கடலில் ஏதாவது சம்பவங்கள் ஏற்பட்ட போது சிறிலங்கா அரசாங்கம், கடற்படை கண்காணிப்புக்குழுவை அந்த இடத்திற்குக் கொண்டு வருவது வழக்கம். அவர்கள் வந்து இந்தப்பிரச்சினையில் தலை யிட்டு சிலசமயங்களில் தீர்த்து வைத்திருக்கின்றார்கள். சில சம யங்களில் அசம்பாவித சம்பவங் களும் நடைபெற்றிருக்கின்றன. என்றாலும் கண்காணிப்புக்குழு அந்த இடத்தில் நின்றிருக்கிறது. இந்த முறைதான் கண்காணிப் புக்குழுவை சிறிலங்காக்கடற்படை அழைக்கவில்லை. அதிலிருந்தே இது இரகசியமாக கண்காணிப் புக்குழுவிற்குத் தெரியாமல் எமது கப்பலைத் தடுத்து தாக்குதலை நடத்திவிட்டு இப்போது நாங்கள் ஆயுதங்களைக் கொண்டுவர முயற்சித்தோம். எமது கப்பலி லிருந்த போராளிகள் கடற்படைக் கப்பல் மீது தாக்குதல் நடத்தினார் கள். அதனால் நாங்கள் பதிலுக் குத் தாக்கினோம் என விதண்டா வாதக் கதைகள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

நாங்கள் கண்காணிப்புக்குழுத் தலைவருக்கு விளக்கமாகச் சொன்னது என்னவென்றால் உங் களை ஏன் அந்த இடத்திற்குக் கொண்டு வரவில்லை என்று.

அடுத்ததாக இந்த சம்பவம் பற்றி கடற்படையினர் ஒரு பக்க சார்பாகத்தான் தகவல் கொடுத் துக் கொண்டிருக்கிறது. எங்கள் தரப்பில் உண்மையைச் சொல் வதற்கு அங்கு எமது போராளிகள் இல்லை. வீரச்சாவடைந்து விட் டார்கள். கப்பலும் முழுமையாக தாழ்ந்துவிட்டது. ஆகவே அந்தக் கப்பலில் ஒரு கொடி இருந்ததா அல்லது வேறு ஏதாவது அடை யாளங்கள் இருந்ததா என்பது பற்றி சொல்ல முடியாது ஏனென் றால் கப்பல் ஆழ்கடலில் எரிந்து மூழ்கிவிட்டது. ஆகவே ஆதாரங் களை கடற்படை அழித்துவிட்டு பொய் சொல்லுகிறது என கண் காணிப்புக் குழுவினருக்கு சொல் லியிருக்கிறோம்.

அடுத்ததாக இந்தப் பிரச்சி னையில் சிறிலங்காப் படையினர் தான்தோன்றித்தனமாக நடந்து கொண்டதால் மேற்கொண்டு கண்காணிப்புக் குழுவையும், கண் காணிப்புச் செயற்பாட்டையும் இது செயலிழக்கச் செய்துவிட்டது. ஆகவே கடற்படையும், இராணு வமும் தான் தோன்றித்தனமான முறையில் நடக்க வெளிக்கிட்டார் களென்றால் கண்காணிப்புக்குழு, புரிந்துணர்வு உடன்பாடு என்ப திலும் அர்த்தமில்லை என்று நாங் கள் அவர்களுக்கு விளக்கினோம்.

மூன்றாவதானதும் முக்கிய மானதுமான விடயத்தை விளக் கினோம். அது என்னவென்று சொன்னால் போர் நிறுத்த ஒப்பந் தத்தில் ஒரு சரத்து இருக்கிறது. 1.3 இந்த சரத்தின் பிரகாரம் சிறிலங்கா கடற்படை தனது பிர தேச ஒருமைப்பாட்டையும், இறை யாண்மையையும் நிலை நிறுத்த லாம். ஆனால் விடுதலைப்புலி களுடன் மோதலுக்கு போகக் கூடாது என்று அந்தச் சரத்து தெளிவாகச் சொல்லுகிறது. ஆகவே இந்த இறையாண் மையை நிலை நாட்டும் பணியில் விடுதலைப்புலிகளுடன் சண்டை யைத் தவிர்க்கும்படியும் அந்தச் சரத்து வலியுறுத்திச் சொல்லு கிறது. அப்படி இருக்க எமது கப்பல் மீது தாக்குதலை நடத்தி யது இந்த விதியை அப்பட்டமாக மீறும் செயலாகும் என்று அவர் களுக்கு வலியுறுத்தினோம். ஆகவே நாங்கள் எங்களது நிலைப்பாட்டை விளக்கமாக சொல்லியிருக்கிறோம். இவர்கள் அரச தரப்புப் பிரதிநிதிகளுடன் கதைத்து தாங்கள் இறுதியாக ஒரு அறிக்கையை வெளியிடுவ தாக சொன்னார்கள். நாங்கள் சொன்னோம் அந்த அறிக்கை உண்மையில் நேர்மையான முறை யில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு இறுதித் தீர்மானமாக - இறுதி முடிவாக - இறுதித் தீர்ப்பாக அமைய வேண்டும் என்று விளக் கினோம்.

**கேள்வி:** கடலில் நடந்த சம்பவம் சமாதான நடவடிக்கையில் பார தூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் என கூறியிருந்தீர்கள் எத்தகைய பாரதூரமான பாதிப்புக்களை ஏற்படுத்தும்?

**பதில்:** பரஸ்பர நல்லெண்ண சூழ்நிலையை கடந்த ஆறு மாதங் களாக நிலைநிறுத்துவதற்கு நாங்கள் மிகவும் கஷ்ரப்பட்டு வந்திருக்கிறோம். பேச்சுவார்த்தை மேசையில் பரஸ்பர நல்லுறவு நிலவினாலும் இந்த களநிலவரம், கள யதார்த்தம் மோசமாக இருக்கிறது. இராணுவம் கடும் போக்கைக் கடைப்பிடிக்கிறது. கடற்படை கடும் போக்கைக் கடைப்பிடிக்கிறது. இராணுவத் தினர் தாம் ஆக்கிரமித்துள்ள நிலங்களிலிருந்து வெளியேற மறுக்கிறார்கள். உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாதிருக்கிறது. கடலிலும் சரி, தரையிலும் சரி எமது போராளிகள் தாக்கப்படுகிறார்கள். இன்றைய அமைதிநிலை நிலவிய போதும் இயல்புநிலை தோன் றாததற்கு ஆயுதப்படையினர் தான் காரணமாகும். ஆயுதப்படை காரணமென்று சொல்லும்போது அதற்குப் பின்னால் பெரும் சக்தி இருக்கிறது. அதாவது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இருக்கிறார் இவர் தான் பிரதம தளகர்த்தா. ஆகவே அவரது அதிகாரத்தின் கீழுள்ள ஆயுதப்படைகள் போர் நிறுத்தத்தை செம்மையாகப் பேணவில்லை. போர் நிறுத்த விதிகளை நடைமுறைப்படுத்த வில்லை. இதுதான் உண்மையான பிரச்சினை. ஆகவே இப்படியான பிரச்சினை யதார்த்தமாக இருக் கும் போது பேச்சுவார்த்தைகள் சுமுகமாக தீர்வை நோக்கி நகர் வது சாத்தியப்படாது. அதுதான் உண்மை. ஆகவே இதை நாங்கள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு எடுத்துச் சொன் னோம். அடுத்ததாக ஒரு சுமுக மான பரஸ்பர நம்பிக்கையில் லாத பேச்சுவார்த்தைகளில் அர்த்த மில்லை. அடுத்தபடியாக இராணு வத்தையும் கடற்படையையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல் லாத அரசுடன் பேசியும் பிர யோசனமில்லை.

இப்படியான நிகழ்வுகள் எமது தலைமைப்பீடத்திற்கும், எமது போராளிகள் மத்தியிலும் பெரிய அவநம்பிக்கை, ஆத்திரத்தைத் தோற்றுவித்திருக்கிறது. மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தி வருகிறது. பேச்சுக்கள் இழுபட்டுச் செல்கிறது. ஆனால் இதன் பலா பலன்களாக மக்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை. எந்தவிதமான இயல்புநிலையும் தோன்றவில்லை. பத்து இலட்சம் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் அவதிப்பட்டுக் கொண் டிருக்கின்றார்கள். ஆகவே இப்படி யான சூழ்நிலையில் இப்படியான ஆத்திரமூட்டும் செயல்கள் நிகழ் வது இந்தப் பேச்சுவார்த்தைக்கு பங்கம் இளைக்கும் என்றே நாங்கள் கருதுகிறோம். ஆனால் என்னவிதமான வகையில் இந்தப் பாதிப்பு எழும் என்பதை நாங்கள் சொல்ல முடியாது. இனி என்ன செய்வது என்பது பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

**கேள்வி:** நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரும், துணை வெளிவிவகார அமைச்ச ரும், விடுதலைப் புலிகள் பிரதிநிதி களை சந்திப்பதாக இருந்தது. அந்தச் சந்திப்பு திட்டமிட்டபடி நடைபெறுமா?

**பதில்:** நோர்வே வெளிவிவகார அமைச்சர் வர இருந்தார். தலை வர் அவர்களை சந்திக்க இருந் தார். ஆனால் மத்திய கிழக்கில் குறிப்பாக ஈராக் நெருக்கடி தீவிர மடைவதாலும் அமெரிக்கா அனேகமாக தனது ஆக்கிரமிப்புப் படை எடுப்பை நிகழ்த்த விருப்ப தாலும் ஐ.நா.பாதுகாப்புச்சபை அடிக்கடி கூடி இதுபற்றி கதைக்க இருப்பதாலும் நோர்வே வெளிவிவகார அமைச்சர், ஐ.நா.சபைக்கு செல்லவிருப்பதால் அவரது கிளிநொச்சி விஜயம் பின் போடப்பட்டிருக்கிறது. ஆனாலும் உதவி வெளிவிவகார அமைச்சர் கெல்கேசன் இன்று வருகிறார். நானும், அரசியல்துறைப் பொறுப் பாளர் தமிழ்ச்செல்வன் அவர் களும் அவரைச் சந்திப்போம். எமது தலைவர் அவர்கள் அவ ரைச் சந்திப்பாரா? இல்லையா? எனக் கூறமுடியாது. இன்றுள்ள நிலமைகள் கடற்பரப்பில் நிகழ்ந்த கோரமான சம்பவங்களையும், எமது அதிருப்தியையும் நாம் அவருக்கு எடுத்து விளக்குவோம்.

**கேள்வி:** யாழ்ப்பாணம், மன்னார், வவுனியாவிலிருந்து போராளி களை மீளப் பெற்றுக் கொண் டுள்ளதாக அறிகிறோம். அது பற்றி ஏதும் கூறமுடியுமா?

**பதில்:** இரண்டு காரணத்திற்காக போராளிகளை மீள அழைத்தோம். ஒன்று தற்போது நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் போர் நிறுத்தம் சீர் குலைந்து யுத்தம் ஏற்படுமென நாம் கருதவில்லை. எம்மைப் பொறுத்தவரை நாம் இறுக்கமாக போர் நிறுத்தத்தைக் கடைப் பிடிப் போம். ஆகவே எமது மக்கள் போர் ஏற்படும் இச்சம்பவத்தை யடுத்து நிலமை மாறும் என அஞ்சத் தேவையில்லை. ஏனென் றால் விடுதலைப்புலிகள் இயக்கம் உறுதியாக இந்த விடயத்தில் போர் நிறுத்தத்தை மீறுவதில்லை என்பதில் உறுதியாய் இருக்கின் றார்கள். ஆனாலும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள எமது முக்கிய பொறுப்பாளர்கள், செயற்பாட் டாளர்களை நாங்கள் அழைத் திருக்கிறோம். இரண்டு நோக்கத் திற்காக ஒன்று இன்றைய நில மையை அவர்களுக்கு விளங் கப்படுத்தவும் மற்றது அவர்களும் இவ்வாறான நெருக்கடியான சம் பவங்கள் நிகழ்ந்து சில சமயங் களில் இராணுவம் தாக்குதலை நடத்தி ஒரு யுத்தத்தைக் கொண்டு வந்தால் அவர்களது பாதுகாப்பு கருதியும் இந்த நடவடிக்கையை நாங்கள் எடுத்திருக்கிறோம். சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் பாதுகாப் பற்ற சூழ்நிலையில் ஆயுதமற்ற சூழ்நிலையில் இருப்பதும் அவர் களுக்கொரு ஆபத்தென்பதால் இவ்வாறான சூழ்நிலைகளில் அவர்களை மீள அழைத்து நிலமை சீரடைந்ததும் மீண்டும் திருப்பி அனுப்ப முடிவெடுத்திருக் கின்றோம் என்றார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.